இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. செயற்குழுகூட்டம் ஜி.கே.மில்லேனியா ஓட்டலில் மாவட்ட அவைத்தலைவர் எ.கே.சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இதில் இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆர்.காந்தி கலந்து கொண்டு தமிழின தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் சிறப்பான முறையில் கொண்டாடுவது குறித்து பேசினார். இக்கூட்டத்தில் ஆர்.வினோத்காந்தி, துரைமஸ்தான் குமுதா குமார் ஆற்காடு ஜெ.எல்.ஈஸ்வரப்பன், சோளிங்கர் என்.ஜி.பார்த்திபன், ஜி.கே.குமுமம் சந்தோஷ் காந்தி மற்றும் தலைமை செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், ஒன்றிய நகராட்சி பேரூராட்சி உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள். கலந்து கொண்டனர். இறுதியாக மாவட்ட துனை செயலாளர் மு.சிவானந்தம் நன்றி கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினுக்கு வாழ்த்து!

நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

நாமக்கல், மே 21 - நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் நடனசபாபதி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் நாமக்கல் மேற்கு மாவட்ட பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். மூர்த்தி சிறப்புரையாற்றினார்.

இந்த கூட்டத்தில், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி பொதுச்செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் நடந்து முடிந்த தேர்தலி போது தேர்தலில் பணியாற்றிய அனைத்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள் தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்டோருக்கு நன்றி தெரிவித்தார். சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், பரமத்தி வேலூர், குமாரபாளையம் மற்றும் திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதிகளில் தேர்தல் பணியில் ஈடுபட்ட கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுக்கு நன்றி தெரிவிப்பதுடன், தேர்தலில் ஆதரவு அளித்த வாக்காளர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் வகையில் தீர்மானங்கள் நிறைவேற்ற ப்பட்டன. இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நகர மற்றும் பேரூர் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் திமுக சார்பில் விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ள விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி. மார்க்கண்டேயன் புதூர் பேருந்து நிலையம் முன்பு வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி தெரிவித்தார். நிகழ்வில் புதூர் ஒன்றிய செயலாளர்கள் செல்வராஜ், ராதாகிருஷ்ணன், மும்மூர்த்தி, புதூர் பேரூர் கழக செயலாளர் மருதுபாண்டியன் பொதுக்குழு உறுப்பினர் ராஜாக்கண்ணு, தலைமைக் கழக பேச்சாளர் தமிழ் பிரியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்தில் உள்ள 2 சட்டமன்றத் தொகுதிகள் வாரியாக சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து ஆய்வு செய்வதற்காக, கழக சட்ட திட்ட திருத்த குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர் மற்றும் மகளிர் அணி இணையதள செயலாளர் திருமதி.யாழினி ஆகியோர் அடங்கிய கள ஆய்வு குழுவினர் கீழ் குறிப்பிட்டுள்ள தொகுதிகளில் ஆய்வு செய்கின்றனர்ன்று மாவட்டப் பொறுப்பாளர் ம. கிரகாம்பெல் தெரிவித்துள்ளார்.

1. இராதாபுரம் தொகுதி

நாள்: 23.05.2026 சனிக்கிழமை

காலை 9.30 மணி

நடைபெறும் இடம் எம்.எஸ்.மஹால் வள்ளியூர்.

2. நாங்குநேரி தொகுதி

நாள் 26.05.2026 செவ்வாய்க்கிழமை

காலை 9:30 மணி

நடைபெறும் இடம் அருணா திருமண மண்டபம் களக்காடு.

அண்ணா அறிவாலயம்
சென்னை - 18
20.05.2026

தலைமைக் கழகம்
தி.மு.க.

சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

மதுரை வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மதுரை கிழக்கு, மதுரை மேற்கு, மேலூர் மற்றும் சோழவந்தான் சட்டமன்ற தொகுதிகளுக்கான கள ஆய்வுக் கூட்டம் கீழ்க்கண்ட விவரப்படி நடைபெற உள்ளது என்று மாவட்டச் செயலாளர் பி. மூர்த்தி தெரிவித்துள்ளார்.

மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கான களஆய்வு 21.05.2026 வியாழக்கிழமை ஆலாத்தூர் பி.ஆர். திருமண மஹாலிலும், மதுரை மேற்கு தொகுதிக்கான கள ஆய்வு 22.05.2026 வெள்ளிக்கிழமை பரவை ஏ.எஸ்.ஆர். திருமண மண்டபத்திலும், மேலூர் சட்டமன்ற தொகுதிக்கான கள ஆய்வு 25.05.2026 திங்கள் கிழமை மேலூர் மூவேந்தர் பண்பாட்டு கழக திருமண மண்டபத்திலும், சோழவந்தான் சட்டமன்ற தொகுதிக்கான கள ஆய்வு 26.05.2026 செவ்வாய்க்கிழமை அலங்காநல்லூர் சுபிக்க்ஷா திருமண மண்டபத்திலும் கழக இளைஞரணி மாநிலத் துணை செயலாளர் ஜோயல், கழக மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

அண்ணா அறிவாலயம்
சென்னை - 18
20.05.2026

தலைமைக் கழகம்
தி.மு.க.

மயிலாடுதுறையில் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

மயிலாடுதுறை, மே 21- மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறை விஜய் திருமண மஹாலில் நடைபெற்றது. கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரு மான நிவேதா எம்.முருகன் பேசினார். உடன் மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி. சினிவாசன் கழக உயர் நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினரும், தலைமைச் செயற்குழு உறுப்பினரு மான எம்.பன்னீர்செல்வம், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர். அருள்செல்வம், மாநில விவசாய தொழிலாளர் அணி இணை செயலாளர் ஜெக. வீர பாண்டியன், மாநில இலக்கிய அணி துணை செயலாளர் வை. சௌமியன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.சி.என்.விஜயபாலன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என்.ரவி, முத்து மகேந்திரன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வ மணி, கண்ணகி பன்னீர், பொருளாளர் மகா. அலெக்சான்டர் மற்றும் பலர் உள்ளனர்.

சட்டமன்றத் தொகுதி-கள ஆய்வு!

தேனி தெற்கு மாவட்டக்கழக செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் அறிவிப்பின்படி கம்பம், ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதிகளில் கள ஆய்வுக்கூட்டம் திருமதி.அஞ்சுகம்பூபதி, துணை மேயர், தஞ்சை மாநகராட்சி, பிரபு கஜேந்திரன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஆகியோர் தலைமையில் கீழ்க்கண்டவாறு நடைபெற உள்ளது என்று மாவட்டச் செயலாளர் கம்பம் நா. இராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சட்டமன்றத் தொகுதி	நாள்	இடம்
கம்பம்	22.05.2026 வெள்ளிக்கிழமை நேரம் : காலை 09.00 மணி முதல்	நா.நடராஜன்,எம்.ஏ., எம்.பி. நினைவு திருமண மண்டபம், கம்பம்.
ஆண்டிபட்டி	24.05.2026 ஞாயிற்றுக்கிழமை நேரம் : காலை 09.00 மணி முதல் பகல் 12.30 மணி வரை	பத்ரகாளியம்மன் திருமண மண்டபம், கடமலைக்குண்டு. (கடமலைமயிலை வடக்கு மற்றும் தெற்கு ஒன்றியம் மட்டும்)
	24.05.2026 ஞாயிற்றுக்கிழமை நேரம் : மதியம் 01.00 மணி முதல்	ஒன்றியக்கழக அலுவலகம், ஆண்டிபட்டி.(ஆண்டிபட்டி கிழக்கு, மேற்கு ஒன்றியம், கம்பம் ஒன்றியம், கூடலூர் நகரம்)

அண்ணா அறிவாலயம்
சென்னை - 18

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

காரைக்குடி இராம. சுப்பையா
மே 21 (1997)

சுயமரியாதை இயக்கத் தொண்டர். கழகம் தொடங்கப்பட்ட நாளில் இருந்து உறுப்பினர். வைதீகக் கோட்டையான காரைக்குடிப் பகுதியில் திராவிட இயக்கத்தைப் பரப்பியவர்.

1953ஆம் ஆண்டு நடைபெற்ற கல்லக்குடிப் போராட்டத்தில் இரண்டாம் அணியின் தலைவராகப் பொறுப்பேற்று, இரயில் மறியல் செய்து, கைதாகி, தலைவர் கலைஞர் அவர்களுடன் திருச்சி சிறை புகுந்தவர்.

1972ஆம் ஆண்டு முதல் ஆறாண்டு காலம் தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் உறுப்பினராக பணியாற்றியவர்.

90 வயது வரை சுயமரியாதைக்காரராகவும், தி.மு.கழகத்தின் தொண்டராகவும் வாழ்ந்து மறைந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

பசும்பொன் தா.கிருட்டிணன் நினைவு நாள்!

திருமதி தமிழரசி ரவிக்குமார் தலைமையில் கழகத்தினர் மரியாதை!

சிவகங்கை, மே 21 - சிவகங்கை மாவட்டம் மானா மதுரை தாலுகா கொம்பு காரனேந்நலில் பிறந்தவர் பசும் பொன் தா.கிருட்டிணன். இவர் பள்ளி பருவத்தில் மாணவர் மன்றம் துவக்கி கல்லூரி வாழ்க்கையில் மாணவர் திமுகவை இயக்கத்தை தொடங்கி கழகத்தில் தீவிரமாக பணியாற்றி வந்தார் தென் மாவட்டங்களில் கழக வளர்ச்சிக்கு அயாராது பணியாற்றியவர். இவர் ஒன்றுபட்ட ராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளராகவும், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினராகவும் மானாமதுரை ஒன்றிய பெருந்தலைவர் ஆகவும் பணியாற்றியவர். முன்னாள் அமைச்சர் பசும்பொன் தா.கிருட்டிணன் மே மாதம் 20ம் தேதி 2003ஆம் ஆண்டு மரணமடைந்தார். அவரது நினைவினைப் போற்றும் வகையில் அவர் சொந்த ஊரான கொம்பு காரனேந்தலில் பசும் பொன் தா.கிருட்டிணன் நினைவிடம் அமைக்கப்பட்டுள்ளது .ஆண்டுதோறும் மே 20 ஆம் தேதி சிவகங்கை மாவட்ட திமுக மற்றும் பசும்பொன் தா. கிருட்டிணன் குடும்பத்தின் சார் பில் நினைவு தினம் அனுசரிக்கப் பட்டு வருகின்றது . நேற்று 23வது ஆண்டு நினைவு தினத்தை பசும்பொன் தா.கிருட்டிணன் நினைவு இடத்தில் முன்னாள் அமைச்சர் திருமதி தமிழரசி ரவிக்குமார் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார் . அவரைத் தொடர்ந்து செயற் குழு உறுப்பினர் தா.கிருட்டிணன் சகோதரர் தா. ராமையா முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப.தமிழரசன், எஸ்.மாரியப்பன்கென்னடி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தா.இரா நெடுஞ்செழியன், ஒன்றிய செயலாளர்கள் மா .அண்ணாதுரை, துரை. ராஜா மணி, அ.முத்துச்சாமி, திருமலை முத்துராமலிங்கம், பெ. மந்த காளை, கே.பாலசுப்பிரமணியன் பூமணி ,வே தமிழ்மாறன், கா வெங்கட்ராமன், வே.பூபாலசிங்கம், எம்.ஜெயராமன், முன்னாள் ஒன்றிய குழு தலைவர் திருமதி லதா அண்ணாதுரை ,மாவட்ட இளை ஞரணி துணை அமைப்பாளர்கள் கார்த்தி, மதிவாணன், ஒன்றிய துணைச் செயலாளர்சிவபுரிசேகர் காரைக்குடி மாநகர செயலாளர் துணை மேயர் நா.குணசேகரன், நகர் கழக செயலாளர் கள் க.பொன்னுச்சாமி ,சி.எம். துரை.ஆனந்த், விவசாய அணி அச்சன்குளம் கு.முருகன், நிர்வாகிகள் கார்த்தி.மாரிகண்ணன்,அன்னவாசல் சண்முகம், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திருமதிபவானி கணேசன், மானாமதுரை நகர் மன்ற துணை தலைவர் பாலா சுந்தர் பச்சேரி சி.ஆர்.சுந்தர ராஜன் மற்றும் சுற்றுப்புற கிராம மக்கள் திமுகவினர் மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தினார்கள் திருப்புவனம்.

திருப்புவனம் பஸ்நிலையம் முன்பாக முன்னாள் அமைச்சர் பசும்பொன் தா.கிருட்டிணன் நினைவு தினத்தை முன்னிட்டு தா.கிருட்டிணன் திருவுருவப்படத்திற்கு மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கை மாறன் மலர்தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து ஒன்றிய கழக செயலாளர் திருமதி வசந்தி சேங்கை மாறன்.பேரூர் கழக செயலாளர் நாகூர் கணி, அண்ணாமலை ஈஸ்வரன் மற்றும் நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஆ. நெடுஞ்செழியன்
மே 21 (2001)

சேலம் மாவட்டக் கழகச் செயலாளர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்களின் மூத்த மகனான இவர், சேலம் நகர இளைஞர் அணி அமைப்பாளர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளில் திறம்பட பணியாற்றி, மறைவெய்தியபோது சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளராக பணியாற்றியவர்.

சேலம் மாவட்ட ஊராட்சித் தலைவர், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர், மாவட்ட பால்வள இயக்குநர் ஆகிய பொறுப்புக்களை வகித்தவர்.

கழகம் எதிர்க்கட்சியாக இருந்த காலங்களில் நடைபெற்ற போராட்டங்கள் பலவற்றிலும் முன்னணியில் நின்று கழகத்தினரை வழிநடத்தி, அவர்களுடன் சிறை சென்றவர்.

"கழகக் காளை ஆ.நெடுஞ்செழியன் மறைந்துவிட்டார் என்ற இடி போன்ற செய்தியினைக் கேட்டு என்னைத் தேற்றிக் கொள்ள இயலாமல், என் தம்பியையும் தேற்றிட இயலாமல் தவிக்கிறேன். தம்பி செழியா, என்றும் வாழும் உன் புகழ்!" என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.